கடவுள் துணை செய்யவும்.

# குளுமாயி அம்மன் வரலாறும் ஒண்டிமுத்து சுவாமி வரலாறும், அடங்கிய அலங்காரச்சிந்து.



கனம்

திரிசிரபுரம் புத்தூரில் வசிக்கும் முனுசாமி நாயுடவர்-களால் ஒயில்கும்மியாக பாடியதை,

ஷை திருச்சி தென்னூர் ஜனரல்பஜாரில் புஸ்தகவியாபாரம் சட்டாம்பிள்ளை என்கிற

**எஸ். காதர் இப்ருஹீம் அவர்களாலும்,**

ஷை தி. தா. ஜனரல் பஜாரில் புஸ்தக வியாபாரம்,

**எஸ். கே. நாகைய்ப நாயக்கரவர்களாலும்,**

குளுமாயி அம்மன்வரலாறும ஒண்டிமுத்து வரலாற்றையும் அலங்காரமாகவும், சிந்தாகவும் பாடி இயற்றப்பெற்றது.

ஷை தி. தா. ஜனரல் பஜாரில் காளியம்மன் கோவில் தெருவில் ... லலம் ஆச்சாரி அவர்கள் நன்முயற்சியினால்.

...ச்சிறைப்பள்ளி புத்தூர்,

...ாச பிரஸில் அச்சிடப்பட்டது.

**1913.** பைசா 6.

Q2998:47
N13.
186134

...யர்க்கிரம் நலதாலாசிப்பந்திரம் வெளிவரும்.

# குளுமாயி அம்மன் வரலாறும், ஒண்டிமுத்துசுவாமி வரலாறும் அடங்கிய அலங்காரச் சிந்து.

---

### காப்பு வெண்பா.

அரவாபரணம் அணிந்துலகைகார்க்கும்
அரனார்மகிழ்ந்தீன்ற ஐங்கரா தரணிபுகழ்
செந்தமிழாலிக்கவியை செய்யவெனக்கிப்போ
தந்திடுவீருன்னருளைத்தான்.

### பல்லவி.

வாராய் நீ பெண்ணே குளுமாயம்மனை நாமும்
தெரிசிப்போங்கண்ணே.

### அனுபல்லவி.

வாராய்பெண்ணே நாமும் வந்தோம் திருச்சிநகர்
பாராய் குளுமாயம்மன் பாங்குடன்வரலாற்றை வா.

### சரணங்கள்.

1. வந்தோம் குளுமாய்தன்னை வகையுடன்தெரிசிக்க
அந்தமுடனே திருச்சிவந்த வாலார் சொல்லும்
பந்தமுடனே யானும் பார்த்து மனமகிழ
விந்தையுடனே நீரும் விரைவுடன் சொல்குவீர்.
வந்தவரலாற்றை எந்தன் மனமகிழ
வகையாய் சொல்லுவீரே.

2. உற்றமலையாளந்தன்னிலிருந்ததோர்
உத்தமியாம் ஜெகதீஸ்பரியாமிவள்
உலகந்தன்னிலவள் பேர்புகழ வந்த
ஓங்காரந்தன்னிலுதித்தவளாமவள்
என்னென்று சொல்வேன் அம்மன்மகிமையை
ஏதென்றுரைப்பேன்.

3. ஓங்காரந்தன்னிலுதித்தவளாமவள்
உற்றிடுமந்திர ரகஷியாமவள்
உலகத்தவர் பணியமவருக்கருள் புரிய
முற்பெருங்காளியாய் நின்றனளே அங்கே வாராய்.

4. நின்றிடுங் காலையிலந்த மலையாளம்
நிபுணர்களானவரெல்லோருங்கூடியே

நீமந்தரி வெருயாமந்தரி என்று
நித்தமும் வந்து பணிந்தனரே அங்கே. வாருய்.

5 பணிந்தனரிந்தவிதமாகவே அந்த
பாரியமாமலையாளந்தன்னிலே
அறிவோரிதுசரியேபுரியோமென
அன்புடனேது நினைக்கலுற்ருரவர். வாருய்.

6. உற்றவர்தாமந்த பெற்றவர்க் கேகடை
யுற்றிடும் பூசையை செய்துவைத்து அவர்
உலகோர்துதித்திடும் காவேரி மீதினில்
ஓடத்திலேற்றினருத்தமியையவர். வாருய்.

7. உத்தமியம்பிகை ஞானபராபரி
ஓங்காரசுந்தரியானவளுமவள்
உள்ளங்குளிர்ந்திடதுள்ளும்புனல்தன்னில்
ஓடுங்காவேரி மீதினில்வாராளே வாருய்.

8. வந்தனள் கொச்சிமலையாளமுந்தாண்டி
குடகானந்த மைசூர்தன்னையுந்தான்தாண்டி
மறையோர் புகளரிவோர்கள் நிறைந்திட்ட
மாதுமே சீரங்கபட்டணம் வந்தாளே வாருய்.

9. சீரங்கப்பட்டணந்தன்னை கடந்தம்மன்
சீர்கோட்டை மாரியின் கோவில்தனை விட்டு
சித்தர்குருமுத்திவித்தக தருங்கர்த்தன்
சேருங்கொடிமுடி தான் தாண்டிவாராளே. வாருய்.

10. கொடிமுடி கட்டளை லாலாபேட்டையும் விட்டு
கொஞ்சிடும் சோலை குளித்தலையுந்தாண்டி
கொண்டாடி கண்டோர்பணியவேயம்மனும்
கோதைவந்தாள் வெட்டுவாய் துறைதேடியே. வாருய்.

11. வெட்டுவாய்துறையினில் வந்து நின்று அம்மன்
வேடிக்கையாகவே தான் பிரிந்து அம்மன்
வெள்ளந்தனில உள்ளங் குளிர் கொள்ளும்படியவள்
வேரி உய்யகொண்டான் மீதினில் வாராளே. வாருய்.

12. வந்தவள் நங்கபுரந்தன்னை கண்டுமே
வாழ்த்தியே வாழ்த்தி வரங்கொடுத்து அவள்
வையகம்புகழவே அய்யனருளாளே
வாய்திடவும் வரந்தான் கொடுத்து அம்மன். வாருய்.

13. கொடுத்து அனலைக் கொடியாலம் விட்டுமே
கொண்டபுலிவலம் கோப்பையுந்தான்தாண்டி

86134

கோரும்வரமருள் பாரும்புகழோங்க
குளுமணிகண்டுமே குளிர்ந்தனளே அம்மன். வாருய்

14. கோப்புடனெட்டரை கொத்தட்டையுந்தாண்டி
முள்ளிக்குரும்பூரலவந்தார் வயலூரும்
செஞ்சுக்கிளி மிஞ்சும் மஞ்சுஞ் சொரியுஞ்சோலை
கூடுமல்லித்துரை தாண்டியே அம்மனும்.

வந்தாளேபாராய் சோழனாரைக்கண்டு
மகிழ்ந்தாளே சீராய்.

15 அம்மன் வரும்வழிதன்னிலழகுடன்
ஆனந்தமாய் நின்ற சோழனாரை பார்த்து
அழகாக கரைமீதி துயர்தீர்த்திட அம்பாள்
ஆதரிப்போமென தானினைத்திட அம்மன்.

குதித்தாளேபாராய் படவைவிட்டு அம்பாள்
மிதித்தாளே நேராய்.

16 நினைந்துபடவைவிட்டு தாண்டிக்குதித்துமே
நீரையூமச்சுரிஞ்சிகுளிமிதன்னிலம்மன்
நீரும் வெளிவாரா தன்னை அடைத்துமே
நின்றடைத்தாள் சிலைரூபமதாயம்மன். வாருய்.

17. ஏதோகுளுமியடைத்திருக்குதென்று
எகினர் சோழனார் பள்ளர்யாவருங்கூடி
எந்தம்பலகையை எடுத்துமண்வெட்டியால்
இருக்கது இந்த நற்சிலைகரம் குளுமியில் வாருய்.

18 வெட்டுமிடக்கரந்தன்னிலிரத்தமும்
வேகமுடன்வந்தடிக்கவுங்கண்டுமே
விந்தைபட அந்த ஜாதி ஒருவன் மேல்
வந்து அருள்கொண்டுவாக்களித்தாளம்மன். வாருய்.

19 அம்மனும்வந்தங்கே யிருந்ததோர் மனிதரை
ஆதரிப்பேனென்று அன்றுவாக்களித்ததும்
அல்லோரும் எல்லோரை மனமொக்கிருக்கவே
ஆதரிப்பேனென்று அருள்வாக்களித்தாளே. வாருய்.

20. என்றவளென்னைக் குழுமியிலிருந்துமே
எடுத்ததினுலென்னை குளுமாயி என்றுமே
இன்று முதலெந்தன் பேரையுஞ் சொல்லியே
எல்லோரையுங்காத்து ரெக்ஷிப்பேனென்றுளே வாருய்.

21. உரைத்தபடியங்கு கோவில்கட்டிபல
உத்தமர் போற்றிட உற்றிடுங்காலையில்

ஓதும் பல வேதகாதன் செயல் நாலே
உத்தமிமந்திரத்தாலொடுக்கிவிட்டான்.

ஒடுக்கியே அம்மன் அவனிட்ட வேலை
உத்தமி செய்தாள்.

(ஒண்டி முத்துவைரவர்று) நொண்டிச்சிந்து.

இப்படியிருக்குங்காலை நவல்பட்டியிருந்திடுங்கள்ளரெல்லாம் ஒன்றுகூடியே செப்புமலையாளதேசம் சென்று நாம் சேர்ந்து கொள்ளையடித்து வருவோமென்று அனைவோருமொன்றுகூடி சுருசுருப்பாய் அந்தமலையாளஞ்சென்று விந்தையுடனே கோவில்தன்னில் புகுந்தார் அங்கு கொண்டிருந்த பெட்டிகளை கண்டவர்களும், ஆனந்தமிகவடைந்து, பெட்டிகளை ஆச்சரியங்கொள்ள ஒரு மூச்சதனிலே தூக்கிவழிநடந்தார் யிருட்டதனில் சொல்லவொண்ணாதுலை வழிதான் நடந்தார் காடுவனங்கடந்தார் கரியமலை காறுருதாண்டியவர் கடுகிவந்தார். திரிசிரபுரம் நகர்க்கு தெற்கதனில் திவ்யமுள்ள பெட்டமலைகாட்டில் வந்தே களையால்மிகநலிந்தார், அங்கு கண்டமலைதன்னில் தாங்கள்கொண்டுவந்ததோர் பெட்டிகளையிறக்கிவைத்தே களையாறி பின்பதனை தூக்கிடவே அன்புடனேவந் தசைத்தார்பலகாலும்அசைத்தவுடன் அங்கிருந்தகள்ளர்களும்அந்தகர்களாய் வந்தவழிதெரியாமல் திகைத்தவர்கள் தெய்வமேயாமென்னசெய்வோமென்றுநினைத்து உய்யவகைவேறில்லையே என்றுஒடுங்கிமிகவிழுந்துபுலம்புகையில் உற்றிருந்ததெய்வமது மற்றவன்மீது மருளேறவேயவாதானுகித்து உங்களிருகண்களையும் மாற்றிவைப்பேன் என்னையும்நீங்களிவ்விடமதனில் வைத்துமேபூசைசெய்து என்னை இன்பமுடனேபணிந்தால்அன்புடனேயான ஆதரிப்பேனென்னவே கள்ளர்களும் தங்கள்குடியோடடிமைதானும்பணிந்தார் இப்படியிருக்கும்போது சுவாமியவர் பாரிவேட்டைஒருநாள்போமபொழுது வெகுதூரமதனிலொருமாதுஒலமிட்டு தானழுதசத்தமுங்கேட்டு கேட்டுமேமனங்கலங்கி அங்குகிட்டிநின்றார்கொஞ்சம்எட்டிநின்றார் ஆரம்மாதாயேநீதான் இங்கேதனியதாய் அழுததின்காரணமேது சொல்லுமம்மாயெனவே குளுமாயிஇங்குவந்ததாரப்பாஉன்பெயரைகூறுமப்பா என்றுசொல்லவேததுரையும் மலையாளக்கருப்பனென்பேர் வேட்டைவெளியில்வந்தேன் சொல்லுமம்மாஉன்குறையை அப்பவேசொந்தமலையாளம்விட்டுவந்தவிடத்தில் அந்தணனொருவனென்னையே மந்திரதாலடக்கிவிட்டான்என்னைமொடக்கிவிட்டான் ஆதரிப்பாயென்றாள் ஐயனுமே அந்தமொழிகேட்டிருகண்செந்தழல்போலே அந்தணனையிப்பொழுது அரைக்ஷணத்தில்கொல்லுகிறேனென்று அவராக்ரமத்துடன் கோவில்கதவண்டை சுவாமியவர் குந்தி

நின்றாரங்குழலொன்டி நின்றார் வந்தான்பார்ப்பானும்வந்தவனை வஞ்ச
னையில்லாமலவனெஞ்சமுரிய அரைந்தார் அரையாய் அரை
ந்தவுடன் அந்தணனும்பட்டுவிட்டான்விந்தையுடனே கட்டவி
ழ்ந்து குளுமாயி அங்கனை கண்டுகொண்டாள்கருப்பைதொண்
டுகொண்டாள் அப்பாநீயெனக்காக ஒண்டிநின்று அந்தணனைக்
கொன்றதினால் இன்றுமுதலாய் ஒண்டிமுத்துகருப்பனென்று
உலகத்துள்ளோர் உந்தனையேபூசைசெய்வாரிந்தஉலகோர் வினை
களைத்தீர்த்தருள்வாய் இன்னமென வேண்டியவர்பூசைசெய்யு
மாசையுடனே முன்பூசைஉனக்களித்து பின்பூசைமுக்கியமாய்
கொடுத்திடபக்குவம்செய்தேன் மங்களமுடனேநீயும் உன்னிட
த்தில்வந்தவர்கள் வினைதீர்த்துவாழவைப்பாய் என்றுசீர்பதித்து
அம்மனும்இருந்திட்டாள ஆலயம்புகுந்திட்டாளே. தனத்தோம்.

தன்னார்பாட்டு வர்னமெட்டு.

சீர்மகிமையை பார்ப்போமடி மகிழும்பெண்ணே
மகிழுங்குளுமாயி தெரிசனங்கண்ணே (சீர்)

1. இந்தவிதமாயிருக்குங்காலே
எந்தவிதமே மாசிமாதந்தன்னில்
அந்தமுள்ள வளர்பிறை தேய்பிறையில்
அம்மனை வருகிறதை பார்ப்போம் வாராய். (சீர்)

2. வருடா வருடத்தில் மாசிமாதம்
வளர்பிறை தேய்பிறை செவ்வாய்தனில்
வழமையாய் வருகிற காளிவட்டம் பெண்ணே
வாணை மத்தாப்புடன் வருகிறாள் பாராய். (சீர்)

3. வருகிற விந்தையை பாராய் பெண்ணே
வகையுடன் எதிரெல்லை காரர்களும்
வாஞ்சையாய் வந்து அடிபணிந்து
வாழ்த்தியே சந்தித்து சேர்ந்து போறார். (சீர்)

4. சேர்ந்துமே புத்தூரு மந்தையில் போய் பெண்ணே
சேயிழையே மாதே அம்மன் தன்னை
ஓங்கார யீஸ்பரி என்றிடலாம் இவள்
உச்சித காளியுமென்றிடலாம். (சீர்)

5. சத்தியின் பூசையை பாரும் பாரும் பெண்ணே
சகலருங் கூடி தொழுபவரும்
ஆச்சி குளுமாயியை அடி பணிந்தால் பெண்ணே
அகலுமே வந்தவினைகளெல்லாம். (சீர்)

6. எந்தவிதஞ் சொல்வேன் ஏந்திழையே பெண்ணே
எண்ணப்படாத கோடி மாவிளக்கும்

அந்தமுள்ள மேளவாத்தியமும் இந்த
அகிலத்தில் கண்டதில்லை யாதும் பெண்ணே (சீர்)

7. சுத்த நல்ல பூசையை பார்போம் வாராய் பெண்ணே
சூழும் ஜனங்கள் கண்டு தெரிசிக்கவே
அந்தணர்கள் வாழுமந்த வீதியில்போய் அம்மன்
அகமகிழ்ந்து வாங்குகிறாள் இளனிபூசை (சீர்)

8. ஆயிரம் இளநீர்கள் கண்திரந்து அங்கே
அம்மனுக்கு எதிரினில் வைத்தவுடன்
சூடம் சாப்பிராணியுடன் தூபம் கொடுத்து அங்கே
சுத்திருந்த ஜனங்களுக்கு விபூதி யீய்ந்து (சீர்)

9. அந்தமுடன் இளநீர்கள் பூசைவாங்கி பெண்ணே
அந்தணர்கள் வீதியெல்லாம் சுத்திவந்து
பேர்புகழும் புத்தூரு மந்தையில்வந்து
பிரபல்யமாகவே வந்தமர்ந்தாள். (சீர்)

10. அம்மன் குளுமாயி வந்தமர்ந்து இங்கே
அன்புடனே ஒண்டிமுத்து அருகிருக்க
அனேவோரும் சூழ்ந்துமே தெரிசிக்கவும்
அகமகிழ்ந்து மருளாளியும் வந்தமர்ந்தார். (சீர்)

11. வந்தமர்ந்து மருளாளி வாளிமேலேரி பெண்ணே
வகையுடன் சோதனைக் கேள்விகளையும்
வந்துமே காரியஸ்தர் தான்மகிழ்ந்து
வந்ததோர் குட்டிகளை குடிக்கச்சொன்னார் (சீர்)

12. வருகுது பாரப்போ குட்டியது பெண்ணே
மருப்பட்டா வெள்ளாட்டின் குட்டிகளும்
குட்டியு யானையுமாய் வந்து நிப்போ
வந்ததோர் குட்டிகளை கலிங்கிதுரை. (சீர்)

13. எத்தனை குட்டியென்றெடுத்துரைப்பேன் பெண்ணே
ஏட்டினில் எழுதிமுடியாதடி
கிராமத்து குட்டிகளை அருத்துமேதான்
உதிரத்தை பாத்திரத்தில் வாங்கியேதான். (சீர்)

14. எல்லோரும் பார்த்திருக்க ஒண்டித்துரை அவர்
எந்தவிதமாகவே சாப்பிடுகிறார்
எத்தனை குட்டி என்று சொல்வேன் பெண்ணே
எந்தனால் சொல்லிமுடியாதடி. (சீர்)

5. வந்ததோர் குட்டிகளை கலிங்கித்துரை பெண்ணே
வகையுடன் குடித்துமே எப்பமிட்டு
எங்கேடா குட்டி என்று ஒண்டிமுத்து
இன்பமுடனே அவர் கேள்க்கையிலே. (சீர்)

16. வருகுது பாரப்போ குட்டிகளும்
வரிசை வரிசையுடன் வருகுறபார்
எண்ணிக்கையில்லாத குட்டிகளை அவர்
எடுத்து உதிரத்தை புசித்திடுவார். (சீர்)

17. அம்மனுட கிருபையால் அனைவருக்கும் பெண்ணே
அநேக துன்பங்களும நீங்கிடுமே
அம்மனுட மகிமையை உலகதினில்
ஆரறிவார் அதை நானறியார். (சீர்)

பாலைவாய்க்கழகில்சேந்தார் என்றமெட்டு. (காவடிச்சிந்து.)

86134

அன்னமே குளுமாய் மகிமை என்ன சொல்வேன்
அம்புள்ள ஆரணங்கு கண்மணியே பாரடி-யிந்த
தாரணியில்லாரறிகுவார கூரடி

2 முன்னமே நாம் செய்த திவினை சின்னபின்னமாகுமடி
மூர்த்தி ஒண்டிமுத்தையும் பணிகுவோம்-கலி
தீர்த்திடுவாரிவரெந்தன் சொர்ணமே

3. தீராத பிணிகள் தீர்த்து கோரின வரங்கள் தரும்
சீருடனே வந்த ஒண்டிமுத்தையன்-இவரை
ஆவலாய் பணிகுவோம நா முன்னமே.

4. பாராதபேர்களுமுண்டோ சீரான புத்தூர் மங்கையில்
பாலகரை காக்கவந்த ரெக்ஷகி-இவளை
ஆவலாய் பணிவோர் வெகு பக்ஷமாய்.

5. புத்திரரில்லாதவர்க்கு புத்திரர்களைத் தருவாள்
பூவையே நீ நனமனதாய் போற்றுவாய்-உந்தன்
தாவந்த முழுவதையும் மாற்றுவார்.

6. பக்திமிகும் ஸ்ரீமகிருஷ்ணம் பிள்ளையை யனுதினமும்
பக்ஷமுடன் ஆண்ட கருணாகரி-எங்கும்
ரெக்ஷகியாய் வந்தமர்ந்த தயாபரி.

7. மங்களமாயிஸ்பரியாய் எங்கும் நிறை ஒண்டிமுத்துடன்
மங்கையினில் வந்தமர்ந்த தயாபரி-அன்பர்
சிந்தைகுடிகொண்டிடும் சர்வேஸ்பரி.

8 அரியென்ற அக்ஷரத்தை அறியாத பாலர் நாங்கள்
அன்னையே நீ எங்களையும் காருமே-இத்
தருணத்தில் வந்தெங்களை யாளுமே.

9. சிறுபாலன் காதர்இபுறுஹிம் [illegible] பாடினதில்
பக்ஷம்வைத்து எநதனை [illegible] காருமேசொர்ண[illegible]
ரெக்ஷித்திடுவீரிந்த [illegible]மே.

முற்றிற்று.